ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2240/21 - 2021 අගෝස්තු මස 11 වැනි බදාදා - 2021.08.11
*2240/21 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்***

***3 ஆம் பிரிவின் கீழான கட்டளை***

2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் மூலம் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் 2021, ஓகத்து 12 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறும் வகையில், 2019, திசெம்பர் 05 ஆந் திகதிய 2152/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் III ஆம் அட்டவணையை, குறித்த அட்டவணைக்காக இதனகத்துப் பின்னருள்ள அட்டவணையின் IV ஆம் நிரலில் விதித்துரைக்கப்பட்டுள்ள விலக்களிப்புக்களுக்குட்பட்டு I ஆம் மற்றும் II ஆம் நிரல்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள இ. மு. குறியீடுகளுக்கு நேரெதிரே III ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பண்டங்களைச் சேர்ப்பதன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.

2021, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய 2216/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட, 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழான கட்டளை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

**பசில் ராஜபக்ஷ,**
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2021, ஓகத்து 11.

1A — PG 5417 - 545 (2021/08)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| *I*<br>*இ. மு.*<br>*தலைப்பு* | *II*<br>*இ. மு.*<br>*குறிமீடு* | *III*<br>*விபரம்* | *IV*<br>*சலுகை*<br>*விகிதம்* |
|---|---|---|---|
| **04.02** | | **பாலும், பாலேடும் செறிவாக்கப்பட்டவை அல்லது சீனி அல்லது பிற இனிப்புப் பொருட்கள் சேர்க்கப்பட்டவை.** | |
| | 0402.10.00 | மாவாகவும், பால் குறுணிகளாகவும் அல்லது வேறு திண்ம நிலையாகவும் உள்ளவை, நிறையளவில் 1.5% இற்கு மேற்படாத கொழுப்பினைக் கொண்டவை. | விலக்களிப்பு |
| | | மாவாகவும், பால் குறுணிகளாகவும் அல்லது வேறு திண்ம நிலையாகவும் உள்ளவை, நிறையளவில் 1.5% இற்கு மேற்பட்ட கொழுப்பினைக் கொண்டவை | |
| | 0402.21.00 | சீனி அல்லது பிற இனிப்புப் பொருட்கள் சேர்க்கப்படாதவை | விலக்களிப்பு |
| | 0402.29.00 | பிற | விலக்களிப்பு |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.